

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தந்தை பெரியார் நினைவு தினத்தை முன்னிட்டு பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, இந்நிகழ்வின் போது நகர செயலாளர் வெள்ளைச்சாமி, நகர்மன்றத் தலைவர் திருமலைச்சாமி, ஒட்டன்சத்திரம் மத்திய ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர்.கே.பாலு, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கண்ணன், ஒன்றிய அவைத்தலைவர் செல்வராஜ் ஒன்றிய துணைச் செயலாளர் முருகானந்தம், சிவக்குமார், ராமசாமி உள்ளிட்ட நகர் மன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு ஒன்றிய தி.மு.க. சார்பில் தண்டராம்பட்டில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். ஒன்றிய கழக செயலாளர்கள் மு. பன்னீர்செல்வம், கோ.இரமேஷ், பெ.கோவிந்தன் ஆகியோரின் வரவேற்புரையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை சேர்ந்த மாநில, மாவட்ட, வட்டார, ஒன்றிய, ஊராட்சி, கிளை கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளை சேர்ந்த அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மு.உள்ளாட்சி பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் - குணமும் இருக்கிறது!

## ஜபல்பூர் – ராய்பூர் பிற இடங்களில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, டிச.27 –**

**மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் – ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது; குணமும் இருக்கிறது!

பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் பிரதமர் அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் - ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74% அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது.

எனவே, நாட்டு மக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காய நினைக்கும் கலவரக் கும்பல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிட வேண்டியது நம் அனைவரது பொறுப்பும் கடமையுமாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### ‘ தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ கோவை – ‘கோயில் நகரம்’ மதுரைக்கு

# மெட்ரோ ரயில் திட்டங்களை ஒன்றிய அரசு நிறுத்துவதா?

## மாநிலங்களவையில் – கணபதி ப.ராஜ்குமார் கண்டனம்!



கோவை, டிச. 27 –

தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ கோவை ‘கோயில் நகரம்’ மதுரைக்கு மெட்ரோ ரயில் திட்டங் களை நிறுத்தியது கண்டனத்துக்குரியது என்று முனைவர் கணபதி ப.ராஜ்குமார் எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் ஆஃப் தென்னிந்தியாவின் கோயம்புத்தூர்’ ‘கோயில் நகரம்’ மதுரை ஆகிய மெட்ரோ ரயில் திட்டங் களை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ ரயில் கழகம் மூலம் பிப்ரவரி, 2014 இல் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்திடம் சமர்ப்பித்தது.

மதுரையில், திரு மங்கலம் ஒத்தக்கடை இடையே, 31.93 கி.மீ., துாரத்திற்கு, 11,360 கோடி ரூபாயிலும், கோவையில், அவிநாசி ரோடு முதல் கருமத்தம்பட்டி வரையிலும், உக்கிகடம் முதல், சத்தியமங்கலம் ரோட்டில், வலியம்பாளையம் வரை, 39 கி.மீ., துாரத்துக்கு, 740 கோடி ரூபாய் செலவிலும், 10,740 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி விரைவில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி அதிகாரிகள் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் மெட்ரோ ரயில் திட்டங் களை விரைந்து செயல்படுத்துவதற்கான ஆய்வை முடித்துள்ளனர்.

10 மாதங்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசால் சமர்ப்பிக்கப் பட்டது. இந்நிலையில், 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி போதிய மக்கள் தொகை இல்லை எனக் கூறி மேற்கண்ட இரண்டு மெட்ரோ ரயில் திட்டங் களின் திட்ட அறிக்கைகளை தமிழ்நாடு அரசிடம் திருப்பி அனுப்பிய மத்திய அமைச்சகம், 2017 விதிகளின்படி 20 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மட்டுமே மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். உத்தரபிரதேசத்தில் கான்பூர், ஆக்ரா, மகாராஷ்டிராவின் நாக்பூர் உள்ளிட்ட நகரங்களில் 2 மில்லியனுக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. ‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ கோவை, கோயில் நகரம் மதுரை எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்று கூறினார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மதுரை மாநகர் மாவட்டக் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமில் தீவிரமாகப் பணியாற்றுவீர்!

## மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



மதுரை, டிச. 27–

தேர்தல் ஆணைய உத்தரவுப் படி, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தம் செய்ய, சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக 27–12–2025, 28–12–2025 ஆகிய தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாக நிலை முகவர்கள் (BLA–2) (BLO) மற்றும் கழக உடன்பிறப்புகள் துரிதமாக செயல்பட்டு வாக்காளர்கள் சேர்த்தல் – நீக்கல் – சிறப்பு தீவிர திருத்தம் சரிபார்த்தல் பணிகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு : 27–12–2025, 28–12–2025 ஆகிய தேதிகளில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தல், சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான விவரங்களை மாவட்ட கழக அலுவலகத்தில் வழங்க வேண்டும்.

இவ்வாறு கோ.தளபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தந்தை பெரியாரின் திருவுருவப்படத்திற்கு மாலை!

## மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்!

செஞ்சி டிச 27–

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தந்தை பெரியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளார் மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 52 வது நினைவு தினம் நேற்றுஅனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாரின் திரு உருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன்,மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகர துணை செயலாளர் சங்கர் , பொருளாளர் நெடுஞ்செழியன், எம்.பி.ஆர். மோகன்,மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா,மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர்சேகர், தொண்டர் அணி பாஷா, பஸ் டாண்ட் செல்லன், ஏழுமலை, கோகுல், ராஜ்,தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சியில் தந்தை பெரியாரின் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட கவுன்சிலர்ஏழுமலை, பொதுக்குழு மணிவண்ணன், நகர செயலாளர் கார்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.




திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பார்சம்பேட்டை புனித ஜெயராகினி அன்னை ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் மாவட்ட செயலாளர், க.தேவராஜி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி, கேக் வெட்டி வாழ்த்துகளை தெரிவித்தார். நகர செயலாளர் ம. அன்பழகன் இந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். நகர மன்ற தலைவர் காவியாவிக்டர், ஜோலார்பேட்டை நகர மன்ற துணைத் தலைவர் இந்திரா பெரியார்தாசன், நிர்வாகிகள் மகேந்திரன், மற்றும் பலர் கலந்து கொண்டார்கள்.

### டிசம்பர் 27, 28 ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் நடைபெறும்

# வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில் விடுபட்ட புதிய வாக்காளர்களைச் சேர்த்திடுவீர்!

## விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



செஞ்சி டிச 25 .

டிசம்பர் 27, 28 ஜனவரி 3, 4 ஆகிய 4 நாட்கள் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு சிறப்பு முகாமில் விடுபட்ட புதிய வாக்காளர்களை சேர்த்திடும் முக்கிய பணியில் கழகத்தினர் மும்முரமாக ஈடுபடுவீர் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர்,முன்னாள் அமைச்சர் செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ. வேண்டுகோள்விடுத்துள்ளார் இதுகுறித்து அவரது அறிக்கையில் கூறுகையில்

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி. மயிலம், திண்டிவனம் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் வரைவு வாக்காளர் பட்டியலை பிரித்து ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு அந்தந்த வரைவு வாக்காளர் பட்டியல் பி. எல். ஏ .2, வசம்ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தந்த பூத் பி எல் ஏ 2, பி டி ஏ , பி எல் சி , மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாக சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்திடும் இன்றியமையா பணியில் முழு கவனத்துடன் ஈடுபட வேண்டும்.பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ் ஐ ஆர் படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும் ,வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ் ஐ ஆர் படிவம்கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும் மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்தும் மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர், கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் அனைவரையும் படிவம் 6ல் வாக்காளர்களாக சேர்த்திடும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும்.

இந்நிலையில் இந்திய தேர்தல் ஆணையம் விடுபட்ட வாக்காளர்கள் புதிய வாக்காளர்களை சேர்ப்பதற்காக வ டிசம்பர் 27 ,28,சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் அதேபோல் ஜனவரி மாதம் 3.4. சனி ஞாயிறு கிழமைகளில் என நான்கு நாட்களுக்கு சிறப்பு முகாம் நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள்தலைமையில் காணொளி மூலம் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தியதின்படி நாளை 27, மற்றும் 28ஆம் தேதிகளிலும்,ஜனவரி 3 4 ஆகிய நான்கு நாட்கள் நடைபெறும் வாக்காளர்கள் சேர்த்தல் சிறப்பு முகாமில் கழகத்தினர்கள் அனைவரும் கடுமையாக உழைத்து வாக்காளர் பட்டியலில் பெயர்கள் இருந்தும் எஸ் ஆர் படிவம் கிடைக்கப் பெறாதவர்கள் எஸ் ஐ ஆர் படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டவர்கள் மேலும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்கள் சேர்த்திடும் இன்றியமையா முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட்டு முனைப்புடன் செயல்பட வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம் ,பண்ருட்டி நகர கழகம் வார்டு செயலாளர்கள் கூட்டம் , நகர கழக செயலாளர், நகர மன்ற தலைவர் க. இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல்,கழகநாள்காட்டி,டைரிவழங்கப்பட்டது.புதியவாக்காளர்களையும்,விடுபட்டவாக்காளர்களையும் சேர்க்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அவைத்தலைவர் ஆர்.ராஜா பொருளாளர் ஆர் .கே . இராமலிங்கம், வழக்கறிஞர் பரணி சந்தர், துணை செயலாளர் கௌரி அன்பழகன், ஜி .சீனிவாசன், தகவல் தொழில் நுட்ப அணி வழக்கறிஞர் டி. நாராயணன், இளைஞர் அணி சம்பத் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், வார்டு செயலாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதி புதூர் பகுதியில் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பகுதி கழக செயலாளர் என்.எம்.புண்ணியமூர்த்தி முன்னிலையில் நிகழ்ச்சி ஏற்பாடு 10வது வட்டச் செயலாளர் வி.சி.மாதவன் 75வது பாகம் மருதங்குளம் சு.கேசவன் (BLA2) தேர்தல் பிரச்சார நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தீர்மான குழு செயலாளர் அக்ரி கணேசன், இளைஞர் அணி நிர்வாகிகள் பிரசன்னா, சுரேஷ்பாபு, செந்தில்குமார், தேவி, பிரேமலதா, தீபா, சுற்றுச்சூழல் அணி தீபக், நரசிம்மன், பிரபாகரன் IT, மற்றும் மகளிர் அணி கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.